**செய்தி வெளியீடு எண்.260** **நாள்: 23/03/2010.**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படும் மருத்துவர் காலிப் பணியிடங்கள் உடனுக்குடன் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படுகின்றன. இதுவரை 22 கலந்தாய்வுகள் நடைபெற்று மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 23–வது கலந்தாய்வு, வரும் 25.03.2010 அன்று நடைபெற உள்ளது. இக்கலந்தாய்வில் தருமபுரி, விழுப்புரம் மற்றும் திருவாரூர் அரசு புதிய மருத்துவக்கல்லூரிகளுக்கு தோற்றுவிக்கப்பட்டுள்ள மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளது. இக்கலந்தாய்வு சென்னை, எழும்பூர் பாந்தியன் சாலையில் உள்ள சுகாதாரம் மற்றும் குடும்பநல பயிற்சி நிலையத்தில் காலை 10 மணி முதல் நடைபெறும். கலந்தாய்வில் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவ அலுவர்களுக்கு பணி நியமன ஆணைகள் அன்றே வழங்கப்படும். அவர்கள் 26.03.2010 அன்றே பணியில் சேர வேண்டும்.

இந்த கலந்தாய்வில் கலந்து கொள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த மருத்துவ அலுவலர் பெயர் பட்டியல் www.tnhealth.org என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் அவர்களின் பெயர் இணையதளத்தில் இருந்தால் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

வி.கு. சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**